# பொருளடக்கம்

*

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 16

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு / 21

1 அழைப்புப்பணியின் மகத்துவம் / 25

அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதின் முக்கியத்துவமும் அதன்பால் மனிதர்களுக்குரிய தேவையும் / 25

2 அல்லாஹ்வின் பக்கம் அழைப்பு விடுக்கிற பணியின் உண்மைத்தன்மை / 35

3 அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதின் சட்டம் / 41

4 அல்லாஹ்வின் பக்கம் அழைப்புக் கொடுப்பதின் சிறப்பும் அதை வலியுறுத்துவதும் அதைச் செய்பவர்களைப் பாராட்டுவதும் / 44

5 அழைப்பு விடுக்கப்படுகின்ற பல வகையினர் / 49

6 மக்களிடம் அழைப்புப்பணி செய்யும்போது அவர்களுடைய நிலைமையைக் கவனித்து அழைப்புக் கொடுப்பதற்குரிய பல்வேறு படித்தரங்கள் / 58

7 அழைப்புப்பணியில் ஏற்றமிக்க செயல்பாடுகள் / 62

8 இஸ்லாமின் பக்கம் இறைமறுப்பாளர்களை அழைக்கின்ற முறை / 66

9 அழைப்பாளர்களிடம் இருக்க வேண்டிய சில அடிப்படைகளும் பண்புகளும் / 73

முதலாவது: இஃக்லாஸ் (அல்லாஹ்விற்காக என்றே மனத்தூய்மையோடு செயல்படுவது) / 73

இரண்டாவது: அல்லாஹ்விடம் உண்மையாக நடந்துகொள்வது / 74

மூன்றாவது: நபி ﷺ அவர்களை முன்மாதிரியாக எடுத்துக்கொள்வது / 75

நான்காவது: கல்வியறிவு / 76
ஐந்தாவது: மென்மையைக் கடைப்பிடிப்பது / 79
ஆறாவது: பொறுமை / 81
ஏழாவது: அழகிய முன்மாதிரி / 84
எட்டாவது: அழகிய நற்குணம் / 85
ஒன்பதாவது: முடிந்த அளவுக்கு முயற்சி செய்வது / 86
பத்தாவது: நேர்வழிக்கும் உதவிக்கும்
அல்லாஹ்வைச் சார்ந்திருப்பது / 87
பதினொன்றாவது: அல்லாஹ்விடம் தொடர்ந்து
பிரார்த்தித்து வரவேண்டும் / 88

# 1

## அழைப்புப்பணியின் மகத்துவம்

*

எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே உரியதாகும். அவன் மார்க்கத்தை நமக்குப் பரிபூரணமாக்கிக் கொடுத்தான். அருட்கொடையை நம்மீது நிறைவுபடுத்தினான். இஸ்லாமிய சமுதாயமாகிய நம்முடைய சமுதாயத்தைச் சிறந்த சமுதாயமாக ஆக்கினான். நம்மீது அவனுடைய வசனங்களை ஓதிக்காட்டி நம்மைப் பரிசுத்தப்படுத்தக்கூடியவரான, வேதத்தையும் ஞானத்தையும் நமக்குக் கற்றுத் தரக்கூடியவரான ஓர் இறைத் தூதரை நம்மிலிருந்தே நமக்கு அனுப்பி வைத்தான். கருணையும் ஈடேற்றமும் அகிலத்தாருக்கு அருட்கொடையாக யாரை அல்லாஹ் அனுப்பி வைத்தானோ அப்படிப்பட்ட நம்முடைய நபி முஹம்மது ﷺ அவர்கள்மீதும் அவருடைய குடும்பத்தார், அவருடைய தோழர்கள் அனைவர்மீதும் ஏற்படட்டும்.

### அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதின் முக்கியத்துவமும் அதன்பால் மனிதர்களுக்குரிய தேவையும்

இறை வாழ்த்துக்கும் நபி ஸலவாத்துக்கும் பின்பு: அல்லாஹ் வின் பக்கம் அழைப்புக் கொடுக்கின்ற பணி மார்க்கத்தின் மிக முக்கியமானப் பணிகளில் உள்ளது என்பதும் வணக்க வழிபாடுகளில் மிக மேன்மைமிக்கது, சிறப்புமிக்கது என்பதும் சந்தேகத்திற்கிடமில்லாத விசயமாகும். ஏனென்றால், இதைக் கொண்டு நேர்வழியும் வழிகேடும் தெளிவாகிறது. சத்தியம் எது, அசத்தியம் எது என்றும், தவறு எது, சரி எது என்றும், சீர்திருத்த பாதை எது, குழப்பமான பாதை எது என்றும் தெளிவு கிடைக்கும். அல்லாஹ்வின் பக்கம் அழைப்புக் கொடுக்கின்ற பணி இறைத்தூதர்கள் மற்றும் மறுமைநாள் வரை அவர்களைப் பின்பற்றி நடக்கக்கூடியவர்களின் வழமையான பணியாகும்.

# 2

## அல்லாஹ்வின் பக்கம் அழைப்பு விடுக்கிற பணியின் உண்மைத்தன்மை

*

அல்லாஹ்வின் பக்கம் அழைப்பு விடுக்கின்ற பணியைக் கொண்டே மனிதர்களுடைய நற்பாக்கியமும் இம்மை மறுமையின் வெற்றியும் இரண்டு உலகத்திலும் நஷ்டத்திலிருந்து பாதுகாப்புப் பெற்ற ஈடேற்றமும் கிடைக்கும். அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிற பணி என்றால் அல்லாஹ்வை ஈமான் கொள்வதும் அவனுடைய ரஸூல்மார்கள் கொண்டுவந்த செய்திகளை நம்பி, அவர்கள் ஏவிய விசயங்களுக்குக் கீழ்ப் படிவதும் ஆகும். அழைப்புப்பணி என்பது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய உண்மையான இரட்சகன் வேறு யாரும் இல்லை என்றும் முஹம்மது ﷺ அவர்கள் அவனுடைய தூதராக இருக்கிறார்கள் என்றும் அழைப்புவிடுப்பதாகும். தொழுகையைக் கடைப்பிடித்து வருமாறும் ஸகாத்தைக் கொடுக்குமாறும் றமலான் மாதத்தில் நோன்பு நோற்குமாறும் பைத்துல்லாஹ் எனும் அல்லாஹ்வின் வீடாகிய கஅபாவை ஹஜ்ஜு செய்யுமாறும் அழைப்புவிடுப்பதாகும். அத்துடன், அல்லாஹ்வையும் அவனுடைய மலக்குகளையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் மரணத்திற்குப் பின்பு எழுப்பப்படுவதையும் நன்மையும் தீமையும் அல்லாஹ்வின் நாட்டப்படிதான் நடக்கும் என்றும் ஈமான்கொள்ள வேண்டும் என்பதாக அழைப்புவிடுப்பதாகும். மேலும், அடியான் அல்லாஹ்வைப் பார்ப்பது போன்று வணங்க வேண்டும் என்று அழைப்புவிடுப்பதாகும்.

ஆகவே அல்லாஹ்வின் பக்கம் அழைப்பு விடுப்பது என்றால் அவனுடைய மார்க்கத்தின் பக்கம் அடியார்களை அழைக்க வேண்டும். இதனுடைய அடிப்படை அல்லாஹ் ஒருவனை

# 3

## அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதின் சட்டம்

*

ஆகவே, இந்த மார்க்கத்தை எடுத்துரைப்பதும் உலகத்தாரிடையே இதைப் பரப்புவதும் மார்க்கக் கடமைகளில் ஒன்றாகும். அல்லாஹ் கூறுகிறான்:

وَلْتَكُنْ مِنْكُمْ أُمَّةٌ يَدْعُونَ إِلَى الْخَيْرِ وَيَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَأُولَئِكَ هُمُ الْمُفْلِحُونَ

(முஸ்லிம்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார், (மனிதர்களை 'இஸ்லாம்' எனும்) சிறந்ததின் பக்கம் அழைத்து, நன்மையைச் செய்யும்படி ஏவி, பாவமான செயல்களிலிருந்து (அவர்களைத்) தடுத்துக்கொண்டும் இருக்க வேண்டும். இத்தகையவர்கள்தாம் வெற்றி பெற்றவர்கள். (குர்ஆன் 3:104)

இந்தப் பணி ஃபர்ளு கிபாயா (فَرْضُ كِفَايَةٌ) ஆகும். அதாவது, இஸ்லாமியச் சமுதாயத்தில் சிலர் செய்துவிட்டாலே மற்றவர்கள் அதை நிறைவேற்றாத பாவம் இல்லாது போய்விடும்.

ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா[6] ﵀ அவர்கள்

6 இப்னு தைமிய்யா: இயற்பெயர், அபுல் அப்பாஸ் தகீய்யுத்தீன் அஹ்மது இப்னு அப்துல் ஹலீம். துருக்கியின் ஹர்ரான் நகரில் ஹிஜ்ரீ 661 (கி.பி. 1263)இல் பிறப்பு. அவர்களின் தந்தை, பாட்டனார், மாமா அனைவரும் அன்றைய ஹன்பலி மத்ஹபின் பிரபல அறிஞர்கள். ஏழு வயதில் அவர்களின் குடும்பம் சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸிற்குக் குடிபெயர்ந்தது. இமாமவர்கள் இருநூறுக்கும் மேற்பட்ட அறிஞர்களிடம் கல்வி பயின்றார்கள். அவர்களின் ஆசிரியர்களில் ஒருவரும் சிரியாவின் உயர்நீதிபதியுமான காழீ ஷம்சுத்தீன் அல்மக்திஸி ﵀ அவர்கள். இமாமவர்களின் கல்வி ஆழத்தைப் பார்த்துபதினேழாம் வயதிலேயே அவர்கள் ஃபத்வா தருவதற்கான அதிகாரத்தை வழங்கினார்கள். இப்னு தைமிய்யா ﵀ அவர்கள் தம் ஆயுள் முழுவதையும் அல்லாஹ்வின் மார்க்கப்பணிகளுக்கு அர்ப்பணித்து,

# 9

## அழைப்பாளர்களிடம் இருக்க வேண்டிய சில அடிப்படைகளும் பண்புகளும்

*

அழைப்பாளர்களிடம் சில அடிப்படையான விசயங்கள், பண்புகள் இருக்க வேண்டும் அப்போதுதான் அதனுடைய பலன் கிடைக்கப் பெறலாம். அவை ஏராளமாக இருக்கின்றன. அவற்றில் மிக முக்கியமானவற்றைச் சுருக்கமாகக் கூறுகிறேன்:

### முதலாவது: அல்இஃக்லாஸ்
### [அல்லாஹ்விற்காக மனத்தூய்மையோடு செயல்படுவது]

இது அமல்கள் ஏற்படுவதற்கு அடிப்படையானதாகும். இது இல்லாவிட்டால் அமல்கள் ஏற்கப்படாது. இதைப்பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

أَلَا لِلَّهِ الدِّينُ الْخَالِصُ

பரிசுத்தமான வழிபாடு அல்லாஹ் ஒருவனுக்கே சொந்தமானது என்பதை அறிந்துகொள்வீராக! (குர்ஆன் 39:3)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللَّهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ

அல்லாஹ்வுக்கே மார்க்கத்தைத் தூய்மைப்படுத்தியவர்களாகவும் இஸ்லாமிய மார்க்கத்தில் உறுதிமிக்கவர்களாகவும் இருக்கின்ற நிலையில் அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும் என்பதைத் தவிர வேறு கட்டளை அவர்களுக்கு இடப்படவில்லை. (குர்ஆன் 98:5)

ஆகவே, மார்க்க அழைப்புப்பணி செய்பவர்கள் அமல் செய்யும்போதும் அல்லாஹ்வின் பக்கம் அழைப்புக் கொடுக்

சொல்வதைக் கேட்காதீர்கள்' என்பது போன்று இருக்கும். அவர்கள் அழைப்புக் கொடுக்கிற விசயம் சத்தியமானதாக இருப்பின் அதை அவர்கள்தாம் முதன் முதலாகச் செயல்படுத்த வேண்டும். ஆகவே, இத்தகைய நபர்கள் வெளிப்படையில் பார்த்தால் மக்களிடத்தில் எடுத்துக் கூறுபவர்களாகவும் உண்மையில் பார்த்தால் வழிப்பறிக் கொள்ளையர்களாகவும் இருப்பார்கள். (அல்ஃபவாயித்)

அழைப்பாளர்கள் தம் அழகிய நடத்தையின் மூலமும் செயல்பாட்டின் மூலமும் அழைப்புப்பணியை மக்களிடத்தில் மேற்கொண்டால் அது சொல்லின் மூலம் ஏற்படுகிற தாக்கத்தைவிட மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும்.

## எட்டாவது: அழகிய நற்குணம்

அழகான நற்குணத்தின் மூலமும் நல்ல செயல்பாட்டின் மூலமும் அழைப்புப்பணியை மேற்கொண்டால் அது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும். மக்களுடைய உள்ளங்களை ஈர்த்துவிடும். நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ مِنْ خِيَارِكُمْ أَحْسَنَكُمْ أَخْلاَقًا

'உங்களில் சிறந்தோர் அழகிய குணம் உள்ளவர்களே ஆவர்' (அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு அம்ர் ﷺ, புகாரீ 3559)

மேலும் நபியவர்கள் கூறினார்கள்:

إِنَّ مِنْ أَحَبِّكُمْ إِلَيَّ وَأَقْرَبِكُمْ مِنِّي مَجْلِسًا يَوْمَ الْقِيَامَةِ أَحَاسِنَكُمْ أَخْلاَقًا

மறுமைநாளில் உங்களில் எனக்கு மிக நேசத்திற்குரியோரும் எனக்கு மிக அருகில் இருக்கக்கூடியோரும் எவரெனில் உங்களின் நல்ல குணமுள்ளோரே ஆவர். (அறிவிப்பு: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ﷺ, ஸுனனுத் திர்மிதீ 2018, அஸ்ஸஹீஹா 791)

மேலும் நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّمَا بُعِثْتُ لأُتَمِّمَ مَكَارِمَ الأَخْلاَقِ

நல்ல குணங்களை நிறைவுபடுத்துவதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﷺ, ஸஹீஹுல் அதபில் முஃப்ரத் 207)

ஒருவரையோ இருவரையோ அழைத்துக்கொண்டு வருவார்கள். நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عُرِضَتْ عَلَيَّ الأُمَمُ فَجَعَلَ يَمُرُّ النَّبِيُّ مَعَهُ الرَّجُلُ وَالنَّبِيُّ مَعَهُ الرَّجُلاَنِ وَالنَّبِيُّ مَعَهُ الرَّهْطُ وَالنَّبِيُّ لَيْسَ مَعَهُ أَحَدٌ

(விண்ணுலகப் பயணத்தின்போது) பல சமுதாயத்தார் எனக்கு எடுத்துக்காட்டப்பட்டனர். அப்போது தம்முடன் ஒரேயொரு மனிதர் மட்டுமிருந்த இறைத்தூதரும், இரண்டு மனிதர்கள் மட்டுமே தம்முடனிருந்த இறைத்தூதரும், (பத்துப் பேர்களுக்குட்பட்ட) ஒரு சிறுகூட்டம் மட்டுமே தம்முடன் இருந்த இறைத்தூதரும், தம்முடன் ஒருவருமில்லாத இறைத்தூதரும் கடந்து செல்லத் தொடங்கினர். (அறிவிப்பு: இப்னு அப்பாஸ் ؓ, புகாரீ 5752)

## பதினொன்றாவது:
## அல்லாஹ்விடம் தொடர்ந்து பிரார்த்தித்து வரவேண்டும்

அல்லாஹ் ஒருவனிடத்தில் மட்டுமே உதவி தேட வேண்டும். அவனிடமே நிரந்தரமாக ஒதுங்க வேண்டும். அவனிடத்தில் அதிகமாகப் பிரார்த்தனை செய்ய வேண்டும். அவன் நல்லுதவி செய்யுமாறு அவனிடத்தில் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும்.

அல்லாஹ்வுடைய நபி ஷுஐபு ؑ அவர்கள் கூறியதை அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

إِنْ أُرِيدُ إِلَّا الْإِصْلَاحَ مَا اسْتَطَعْتُ وَمَا تَوْفِيقِي إِلَّا بِاللَّهِ عَلَيْهِ تَوَكَّلْتُ وَإِلَيْهِ أُنِيبُ

என்னால் இயன்றவரை (உங்களைச்) சீர்திருத்துவதைத் தவிர (வேறொன்றையும்) நான் நாடவில்லை. அல்லாஹ்வின் உதவியின்றி நான் (உங்களைச் சீர்திருத்துகிற விசயத்தில்) வெற்றியடைய முடியாது. அவன் மீதே நான் பொறுப்புச் சாட்டியிருக்கிறேன்; அவனையே நான் நோக்கியும் நிற்கிறேன். (குர்ஆன் 11:88)

மேலும், மக்களை நேரான வழியின்பால் அழைக்கும்போது அல்லாஹ் உங்களுக்கு நேரான பாதையைக் காண்பிப்பானாக, சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்கு அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வானாக என்பதாகக் கூறவேண்டும்.